# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 28.3.2018 | 1) இம்மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பாளையங்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள வ.உ.சி. கல்லூரி வளாகத்தில் பிரையண்ட் நகர் 4வது தெரு மேற்கு பகுதியில் மாநகராட்சி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்திற்கு மேல் பக்கம் மற்றும் வட பக்கம் காலியாக உள்ள இடத்தில் சர்வே வார்டு சி, பிளாக் எண். 52, நகரளவு எண் 1 பாகம், சர்வே வார்டு சி, பிளாக் எண். 53 நகரளவு எண் 3 பாகம் இடத்தில் பூங்கா அமைப்பதற்கு 1.17 ஏக்கர் நிலத்தினை வ.உ.சி. கல்விக் கழகம் பொதுக்குழுவில் 26.03.2018ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கல்விக்கழக செயலாளர் மாநகராட்சி வசம் ஒப்படைத்துள்ளனர்.<br>எனவே மேற்படி இடத்தில் பூங்கா அமைப்பதற்கு மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்1.766/2018 மே.ம. | 61)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 2)இம்மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பாளையங் கோட்டை ரோட்டில் அமைந்துள்ள வ.உ.சி. கல்லூரி வளாகத்தில் பிரையண்ட் நகர் 4வது தெரு மேற்கு பகுதியில் மாநகராட்சி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்திற்கு மேல் பக்கம் மற்றும் வட பக்கம் காலியாக உள்ள இடத்தில் சர்வே வார்டு சி. பிளாக் எண். 53 நகரளவு எண் 3 பாகம் இடத்தில் பூங்கா அமைப்பதற்கு 1.17 ஏக்கர் நிலத்தினை வ.உ.சி. கல்விக் கழகம் பொதுக்குழுவில் 26.03.2018ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கல்விக் கழக செயலாளர் மாநகராட்சி வசம் ஒப்படைத்துள்ளனர். மேலும் மேற்படி நிலத்தில் அமையவுள்ள பூங்காவிற்கு விடுதலை போராட்ட வீரர் செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பெயரை சூட்டுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.<br>எனவே மேற்படி இடத்தில் அமையப்பெறும் பூங்காவிற்கு வ.உ.சி. பெயரை சூட்டுவதற்கு அரசிடம் அனுமதி பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்1/766/2018/மே.ம. | 62) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 3) இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மலேரியா தடுப்பு திட்டத்தின் | 63) அலுவலகக் |

| | | |
|---|---|---|
| | மூலம் கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு மற்றும் மலேரியா போன்றவற்றினை தடுக்கும் பொருட்டு மாநகரப் பகுதிகளில் கொசுப்புழுக்களை கட்டுபடுத்தும் புகை மருந்து தெளிக்கப்பட்டு வயருகிறது அவற்றில் நல்ல தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் abate என்கிற Temephos மருந்தினை கொள்முதல் செய்வதற்கு தமிர்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் நி.றவனத்தின் அனுமதி பெற்ற M/s Heranba Industries Limited நிறுவனத்தின் மூலம் லிட்டம் ரூ **569.32** வீதம் **1000** லிட்டர் வாங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்காகும் செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்**2.7958/13** | குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | **4)** தூத்துக்குடி மாநகராட்சி பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள **5** கிராம பஞ்சாயத்து பகுதிகளில் மழைகாலங்களில் ஏற்படும் வெள்ளம் மற்றும் சாலைகளில் தேங்கும் மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்வதற்கு சீரான வாறுகால் வசதி இல்லாததால், மேற்கண்ட பகுதிகளை இணைத்து ணருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டுவதற்கு ஏதவாக, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந**6**) அரசாணை (டி) எண்.**6** நாள் **23.01.2018** அரசாணையில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணியினை உலக வங்கி நிதி ஆதாரத்துடன் தமிழ்நாடு நகர்ப்புற நிதி ஆதார வளர்ச்ச திட்டத்தின் (TNUSDP) கடன் மற்றும் மானியம், உள்ளாட்சி பங்கு தொகையுடன் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள விபரப்படி முதல்கட்ட (Phase-II) பணிகளாக செயல்படுத்த ரூ. **96.ஃ1** கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணையிட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது. | 64) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

| **வ.எண்** | **நிதி ஆதாரம்** | **தொகை (ரூ. கோடி)** | **சதவீதம் ( %)** |
|---|---|---|---|
| **1** | கடன் தொகை (தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி) (TNUDF) உலக வங்கி நிதியுதவியுடன் (TNUSDF) | **9,61** | **10**% |
| **2** | மான்யம் (Project Sustainability Grant Fund PSGF) உலக வங்கி நிதியுதவிடன் (TNUSDF) | **76.90** | **80**% |
| **3** | மாநகராட்சிப் பங்கு த் தொகை | **9.61** | **10**% |
| | **மொத்தம்** | **96.12** | **100**% |
| | மேற்காணும் அரசாணையின்படி கீழ்க்காணும் பட்டியலில் கண்டுள்ள விபரப்படி முதல்கட்ட பணிகளாக **6** சிப்பப் பணிகளாக செயல்படுத்த தொழில்நுட்ப வல்லுநர் மெசர்ஸ். சுன்கான் நிறுவனத்தால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. | | |

| **வ.எண்.** | **சிப்பம் எண்** | **பணிகளின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை** |
|---|---|---|---|
| **1** | **1** | காலாங்கரை ஓடை முதல் பெரியபள்ளம் ஓடை வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் அதனை சார்ந்த பணிகள் (NH-45B) | **12.95** |
| **2** | **2** | காலங்கரை. கழுகுபாதை, கழுதை பாதை ஓடை முதல் | **9.44** |

| | | | |
|---|---|---|---|
| | | சி.வ.குளம் வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | |
| 3 | 3 | சி.வ.குளம் மறு சீரமைப்பு செய்தல், முள்ளிக்குளம் மேம்படுத்துதல் பணி மற்றும் ததனை சார்ந்த பணிகள் | 17.50 |
| 4 | 4 | சி.வ.குளம் முதல் மீளவிட்டான் சாலை வழியாக மழைநீர் கட்டும் பணி மற்றும் அதனை சார்ந்த பணிகள் | 14.04 |
| 5 | 5 | செங்குளம் ஓடை முதல் உப்பாறு ஆறு வரை வடிகால் கட்டும் பணி (NH-7A) | 24.81 |
| 6 | 6 | முள்ளக்காடு ஓடையில் வடிகால் கட்டும் பணி | 6.29 |
| | | | 85.03 |
| | | இதர இனங்கள் | 11.09 |
| | | **மொத்தம்** | **96.12** |

மேற்காணும் பட்டியல் சிப்பம் எண்.1 மற்றும் 5க்கான பணிகள் NH-45B மற்றும் NH-7A ஆகிய இருபகுதிகளிலும் சிப்பம் எண். 1 மற்றும் 5ல் கண்டுள்ள பணிகளை RCC closed rectangular drain அமைத்து கொள்ள அதற்கான உரிய அனுமதி வழங்கலாம் என முதன்மை பொது மேலாளர் தொழில்நுட்பம், இந்திய தேசிய நெடுஞ்சாலைதுறை, மதுரை அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அதற்கான திருத்திய மதிப்பீடு தேசிய நெடுஞ்சாலை தரத்தில் தயார் செய்யும்படி தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு சேவை நிதிநிறுவன முதுநிலை மேலாளர் மற்றும் மேற்படி பணியின் திட்ட வல்லுநர் மெசர்ஸ் சன்கான் நிறுவனத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டது.

எனவே அதன் பேரில் முதல்கட்ட பணிகளான 5 சிப்பப்பணிகிளில் 4 சிப்ப பணிகளை செயல்படுத்த 2017–18ஆம் ஆண்டிக்கான விலைவிகிதப்படி திருத்திய மதிப்பீட பின்வரும் பட்டியலில் கண்டுள்ள விபரப்படி தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | சிப்பம் எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1 | 2 | காலங்கரை. கழுகுபாதை, கழுதை பாதை ஓடை முதல் சி.வ.குளம் வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 16.00 |
| 2 | 3 | சி.வ.குளம் மறு சீரமைப்பு செய்தல், முள்ளிக்குளம் மேம்படுத்துதல் பணி மற்றும் ததனை சார்ந்த பணிகள் | 17.00 |
| 3 | 4 | சி.வ.குளம் முதல் மீளவிட்டான் சாலை வழியாக மழைநீர் கட்டும் பணி மற்றும் அதனை சார்ந்த பணிகள் | 14.50 |
| 4 | 6 | முள்ளக்காடு ஓடையில் வடிகால் கட்டும் பணி | 9.50 |
| | | **மொத்தம்** | **57.00** |

எனவே சிப்பம் எண் 2,3,4 மற்றும் 6க்கான பணிகளுக்கு மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள விபரப்படி 2017.18ஆம் ஆண்டுக்கான விலைவிகிதப்படி திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்ட விபரப்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/9047/2014

| | | |
|---|---|---|
| | 5) முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்களின் தலைமையில் 01.09.2017 அன்று நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டத்தின் 5வது மாநில உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகளில் தீர்மானம் எண்.11ல் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் நுண் உரக்கிடங்கு அமைக்கும் பணியினை உள்ளாட்சி அமைப்புகளில் ஒரே மாதிரியான மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதியளித்துள்ளதை முன்னிட்டு இம்மாநகராட்சி மாமன்றத்தின் தீர்மானம் எண். 88 நாள் 06.10.2017இல் மாநகராட்சி பல்வேறு வார்டு பகுதிகளில் 16 நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.<br>இந்நிலையில் மேற்கண்ட மாமன்றத் தீர்மானப்படி வார்டு எண். 5 எட்டயாபுரம் ரோடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதியில் பாதாள சாக்கடை கழிவுநீர் பண்ணை பகுதியில் நுண்உரம் செயலாக்கம் மையம் அமைக்கும் பணிக்கு கட்டுமான பணி மேற்கொள்ள முற்பட்டபோது மேற்படி பகுதியை சுற்றியுள்ள பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தள்ளதின் போல கட்டுமான பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டது.<br>மேற்படி பகுதியினை சுற்றியுள்ள வார்டு பொது மக்கள் எட்டயபுரம் ரோடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் நுண் உரம் செயலாக்கம் மையம் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தால் மேற்படி நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்கும் பணியினை இம்மாநகராட்சிக்கு சொந்தமான சங்கரப்பேரி ஜோதிநகர் மனைப்பிரிவு எண். LP/R/TK No. 10/88 ல் இம்மாநகராட்சிக்கு சொந்தமான பொது உபயோக இடத்தில் நுண் உரம் செயலாக்கம் மையம் கட்டிடம் கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/1158/2015 | 65)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சிக்கான 2018–19ம் ஆண்டின் உத்தேச வரவு செலவு மதிப்பீடகள் மற்றும் 2017–18ம் வருடத்திய திருத்திய வரவு செலவு மதிப்பீடகள் 1) வருவாய் மற்றும் மூலதன நிதி 2) குடிநீர் மற்றும் வடிகால் நிதி 3) ஆரம்ப கல்வி நிதி ஆகியவகைகளுக்கு மாமன்ற ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>பி1/1242/2018 | 66)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 7) தமிழ்நாடு அரசிதழ் எண்.33 நாள் 25.01.18ன் படி மாநகராட்சி பகுதிகளில் செயல்படும் அரசு கல்வி நிறுவனங்கள் / மாநகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் (சுய நிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகக்கங்கள் தவிர அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்க உரிய பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.<br>இதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். ஆர்.1/7234/2014 நாள் 15.03.2018ம் நாளைய சுற்றறிக்கையின்படி மேற்படி கல்வி பயன்பாட்டுக் கட்டிடங்களுக்கு வரி விதிப்பு தொடர்பான அளவீட்டுப் பணிகள் யாவும் சரியாகவும் தெளிவாகவும் | 67) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புதல் வழங்கப்பட்டது. |

நுணுக்கமாகவும் எவ்வித முறைகேடுகளும் இன்றி சம்பந்தப்பட்ட மாநகராட்சி பொறியாளர்கள் / நகரமைப்பு திட்டஅலுவலர் / ஆய்வாளர்களால் மட்டுமே மெற்கொள்ளப்படுதல் வேண்டும் எனவும் இதன்படி 2017–18ம் இரண்டாவது அரையாண்டுக்குரிய கேட்பு நிர்ணயம் செய்து 15.4.2018க்குள் பணிகளை நிறைவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண். ஆர்1/7234/2014 நாள் 28.03.2018ல் மேற்படி சட்ட திருத்தத்தின்படி மாநகராட்சி பகுதிகளிலுள்ள கல்வி நிறுவனங்களுக்கு வரி விதிப்பு செய்திட ஏதுவாக மாநகராட்சி ஆணையர் உரிய அறிவிப்பு வெளியிடப்படுதல் வேண்டுமெனவும் மாதிரி வரைவு அறிவிப்பினை கூர்ந்தாய்வு செய்து மன்ற அனுமதி பெற்று அறிவிப்பு செய்யுமாறும் குறிப்பிடப்பட்டுள்ள 30 நாட்களில் பெறப்படும் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து இறுதி செய்து அரசிதழில் அறிவிப்பு செய்ய நடவடிகைகள் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் படி

- கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 123 (சி) ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்,
- கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், 1981 பிரிவு 123 (சி) ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்,
- கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 123(சி) ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்.
- கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பய்னபாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்து வரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்.
- கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 123 (சி) ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017.2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து மேற்படி கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்.
- கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 118ன்படி ஆட்சேபணைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு செய்வதற்கும் இதற்கான அனைத்து செலவீனத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டிய பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.
2) கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 118ன் படி

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட முறையில் சொத்து வரி விதிப்பு செய்து உத்தேசிக்கப்பட்டுள்ள விவரம் அறிவிப்பு செய்து அவ்வாறு அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பெறப்படும் ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் மீது இறுதி நடவடிக்கைகள் மேற்கொண்டு மாவட்ட அரசிதழில் உரிய அறிவிப்பினை பிரசுரம் செய்யவும் இதற்கான அனைத்து செலவீனங்களுக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண்.அ1/1303/18 | |
| | 8) தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் நுண் உரமாக்கல் மையம் மூலம் உரம் தயாரிக்க திட்டமிப்பட்டு மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளுக்கு குப்பைகளை பிரித்து சேகரிக்கக்கூடிய 200 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE பேரல்கள் 100 எண்ணம் கொள்முதல் செய்யவும், மேற்படி குப்பைகளை எளிதில் உரமாக்கவும் துர்நாற்றம் வீசுவதை தடுக்கவும் தேவையான EMO Solution முதல் கட்டமாக 50 லிட்டர் கொள்முதல் செய்யவும் மற்றும் துப்புரவு பணிகளுக்கு தேவையான தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிகளுக்கு பொருள்களை கொள்முதல் செய்யவும் அது வகைக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ 5.00 இலட்சத்தினை (ரூபாய் ஐந்து லட்சம்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மான்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம் எச்2/989/2018 | 68) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

ஆணையர்(ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 28.03.2018